[2024 பிப்ரவரி 22

2. புதுப்பிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா நினைவிடமும், கலைஞர் அவர்களுடைய புதிய நினைவிடமும் திறத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.*

டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்டமே தன் வாழ்க்கை; வாழ்க்கையே தன் போராட்டம் என வாழ்ந்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர். அவருடைய இறுதிப் பயணம் ஒரு போராட்டக் களம். அந்தப் போராட்டக் களத்தில் நிதானத்தைக் கடைப்பிடித்து, சட்டப் போராட்டம்மூலம் வென்றெடுத்து, கழகத்தினரை வழிநடத்தி, தன் ஆசிரியரான அறிஞர் அண்ணா நினைவிடம் அருகில் தலைவர் கலைஞருக்கு இடத்தை வாங்கிக் கொடுத்தவர் மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞருடைய நினைவுச் சின்னம், சமூக நீதிச் சின்னம்; கலைஞருடைய நினைவுச் சின்னம், மாநில உரிமைகள் சின்னம்; கலைஞருடைய நினைவுச் சின்னம், மதச்சார்பின்மைச் சின்னம். அந்த நினைவிடம் எப்போது திறக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நின்ற தேர்தல்களில் எல்லாம் வென்ற தலைவர்; (மேசையைத் தட்டும் ஒலி) நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய தலைவர்; முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய நினைவிடம் அமைக்கும் பணி முழுமையடைந்திருக்கிறது. தலைவர் கலைஞர் அவர்களுடைய நினைவிடம் மட்டுமல்ல; தலைவர் கலைஞர் அவர்களை உருவாக்கிய, நம் தாய்த் தமிழ்நாட்டிற்கு “தமிழ்நாடு” என்று பெயர் சூட்டிய பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) நினைவிடமும் புனரமைக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.*

அப்படிப் புதுப்பிக்கப்பட்டிருக்கக்கூடிய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நினைவிடமும், தலைவர் கலைஞர் அவர்களுடைய புதிய நினைவிடமும் வருகிற 26 ஆம் தேதி (மேசையைத் தட்டும் ஒலி) மாலை 7–00 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எதற்காக இதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்றால், அந்த நிகழ்ச்சிக்கு அழைப்பிதழ் எதையும் நாங்கள் அச்சிடவில்லை. அதனை ஒரு விழாவாக இல்லாமல், நிகழ்ச்சியாகவே நடத்திட நாங்கள் விரும்பியிருக்கிறோம்; முடிவெடுத்திருக்கிறோம். ஆகவே, அந்த நிகழ்ச்சியிலே இந்த அவையில் இருக்கக்கூடிய ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, கூட்டணிக் கட்சி, தோழமைக் கட்சி என எல்லாக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் பங்கேற்க வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டு மக்களுக்கும் தங்கள் மூலமாக அழைப்பு விடுத்து, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி.*

1. வினாக்கள்—விடைகள்—*தொடர்ச்சி*

உடுக்குறியிட்ட வினாக்கள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி அவர்கள்.*

டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட லக்காபுரம் ஊராட்சியில் பரிசல்துறை பகுதியில் அமைந்துள்ள இரயில்வே பாதை LCM-05 வழியாக நாமக்கல், இராசிபுரம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர், நீலகிரி, கோவை, கேரளா, மைசூர் போன்ற பகுதிகளுக்கு மிக அதிக கனரக வாகனங்கள் உட்பட பல்வேறு வகையான வாகனங்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர் அம்மா, மூலக்கேள்வி வள்ளுவர் கோட்டம் பற்றியது. அது தொடர்பாக ஏதாவது சொல்லுவீர்கள் என்று பார்த்தேன்.*

முற்பகல் 10-20

டாக்டர் சி. சரஸ்வதி: *அதுதான், அதுதான். (குறுக்கீடு) மிக அதிகமான கனரக வாகனங்கள் உட்பட பலவிதமான வாகனங்கள், பல ஆயிரக்கணக்கில் சென்று கொண்டிருக்கின்றன. மேற்கண்ட இரயில்வே பாதையைக் கடக்க உயர்மட்டப் பாலம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்*